# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 ஏப்ரல் மாதம் 05 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள்**

**01.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.03.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/17)**

அ. i. ஆசிரிய மற்றும்அதிபர் சேவைகளுக்கு அரசின் அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் புதிய சேவை யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ii. அதற்காக இவ்வேளையில் எவ்வளவு காலம் சென்றுள்ளது ?

ஆ. i. அப் புதிய சேவைகளில் கடமையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை ஆரம்பத்தில் உள்வாங்கப்படுவதற்கும் பின்னர் உரிய பதவி உயர்வு மற்றும் நிலுவைச் சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனையும் நீங்கள் அறிவீர்களா ?

ii. இதற்காக உங்கள் அமைச்சுக்கு உரிய தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

iii. அந்த ஒவ்வொரு சேவைக்கும் உரியதான மேல் மாகாணத்தின் வலைய ரீதியில் புள்ளி விபரங்கள் மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட நிலு வைச் சம்பளத்தின் அளவினை இச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

iv. குறித்த நடவடிக்கை நிறைவடையவில்லையாயின் அந்தந்த சேவைகளுக்கு உரியதாக வலைய ரீதியில் காணப்படும் பிரச்சினை, அதற்குரிய புள்ளி விபரங்கள் மற்றும் செலுத்தப்படாதுள்ள நிலுவைச் சம்பளத்தின் அளவினை இச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

v. இந்த எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை புதிய சேவைக்கு உள்வாங்கி மற்றும் பதவி உயர்வினை வழங்குவதை நிறைவு செய்து நிலுவைச் சம்பளத்தினை செலுத்த இன்னும் எவ்வளவு காலம் தேவைப்படும் என்பதனை இச் சபைக்கு முன்வைப்பீர்களா ?

**02.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.03.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/18)**

அ. i. மேல் மாகாணத்தின் கல்வி வலயக் காரியாலயங்களில் இணைப்பு உத்தியோகத்தர்களாக முறையான பதவி ஒன்று நடைமுறையில் உள்ளதா ?

ii. நடைமுறையில் உள்ளதாயின் எப்போதிலிருந்து ?

ஆ. i. அப் பதவியினை ஏற்படுத்துவது தொடர்பாக காணப்படும் சட்டரீதியான நிலைமை யாது ?

ii. அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமை என்ன ?

iii. இப் பதவிக்கு எச் சேவையில் இருந்து ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் ? அது எதன் அடிப்படையில்

இ. இவ் வேளையில் அப் பதவியில் எத்தனை உத்தியோகத்தர்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர் ? அவர்கள் யார் என்று இச் சபைக்கு முன்வைப்பீர்களா ?

**03.** **கௌரவ ஜே.ஏ. ரொயிஸ் விஜித பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.03.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**
**(கே/vi (1)16/21)**

அ. நீர்கொழும்பு காமச்சோடை வாரச் சந்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியைப் பயன்படுத்தி புதிதாக கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. நீர்கொழும்பு பிரதான வீதி தொடக்கம் கடற்கரை வரையும், காமச்சோடை வாரச் சந்தை மற்றும் கடற்கரை வீதி கிராமங்களுக்கும் பிரதான பிரவேச மார்க்கமாக 150 வருடத்தை விட அதிக காலம் உபயோகிக்கப்பட்ட நீர்கொழும்பிற்கு என விஷேடமானதெனக் கருதப்படும் கௌரவ விஸ்தீரினி மதகுரு அவர்களை நினைவு படுத்துவதற்காக பெயரிடப்பட்ட "விஸ்தீர்னி வீதி" முழுமையாக மூடப்பட்டு அவ் வீதியின் மத்தியில் புதிய கட்டடம் ஒன்றினை நிர்மாணிப்பது சட்ட ரீதியானதாகுமா ?

இ. அக் கட்டடம் இன்னும் பாவனைக்கு எடுக்கப்படாமல் அதன் சுற்றுப் புறம் அமைந்துள்ள பெருந் தெரு முழுவதும் ஏன் வாரச் சந்தை நடாத்தப்படுகின்றது ?

ஈ. அந்தப் புதிய கட்டடம் மற்றும் வீதியை செப்பனிடுவதற்கு எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது ?

உ. காமச்சோடை வாரச் சந்தை கட்டடம் மற்றும் வளவின் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு நீர் கொழும்பு மாநகர சபையை பயன்படுத்திக் கொள்ளாமைக்குக் காரணம் என்ன ?

ஊ. ஏதாவதொரு நிர்மாண நடவடிக்கைக்கு உரிய உள்ளூராட்சித் தாபனத்தின் அங்கீகாரம் ஒன்று இல்லாது செயற்படுவதற்கு ஏதாவது அமைச்சிற்கு அல்லது மாகாண சபைக்கு, அதிகார சபைக்கு இடம் உண்டா ?

**04.** **கௌரவ ஜே.ஏ. ரொயிஸ் விஜித பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.03.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**
**(கே/vi (1)16/22)**

அ. மேல் மாகாணத்தின் சுற்றுலா அமைச்சிடம் நீர்கொழும்பு ஏத்துகால கடற்கரையின் நீச்சல் தடாகம் காணப்படுகின்றது என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. நீர்கொழும்பு கடற்கரையின் நீச்சல் தடாகத்தின் நிர்மாணம் தொடர்பாக நீர்கொழும்பு மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, கடற்கரை பாதுகாப்பு திணைக்களம் மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பன நிர்மாணத்திற்கு உரிய அங்கீகாரம் வழங்கியுள்ளனவா ?

இ. இந்த நீச்சல் தடாகம் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) இனால் பூர்த்தி செய்யப்பட்டு, மேல் மாகாணத்தின் உல்லாசத் துறை அமைச்சுக்கு எப் போது ஒப்படைக்கப் பட்டுள்ளது ?

ஈ. இந் நீச்சல் தடாகத்தை நிர்மாணிப்பதற்காக எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டுள்ளது ?

உ. இந் நீச்சல் தடாகம் தற்போது எவரினால் பராமரிக்கப்படுகின்றது ?

ஊ. தற்போது நடாத்தப்படுபவர்களுக்கு இந் நீச்சல் தடாகம் டென்டர் முறையின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது ?

எ. அந்த டென்டர் நடவடிக்கை பகிரங்கமான பத்திரிகை அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டிருந்ததா ? அது எப்போது ? எந்தப் பத்திரிகைகளில் ?

ஏ. கேள்வியாளர்கள் எத்தனை பேர் முன்வந்திருந்தனர் ?

ஐ. அக் கேள்வியாளர்களுள் யார் தெரிவு செய்யப்பட்டனர் ? எப்போது ?

ஒ. மேல் மாகாண சபையின் சுற்றுலாத் துறைக்கு உரிய நீர்கொழும்பு ஏத்துகால கடற்கரையின் நீச்சல் தடாகத்தை பேணிச் செல்வதற்குரிய நிபந்தனைகள் உள்ளடக்கிய உடன்படிக்கை ஒன்று காணப்படுகின்றதா ? யாருடன் ?

ஓ. அந்த உடன்படிக்கையின் கால எல்லை எப்போது நிறைவு பெறுகின்றது ?

**05.** **கௌரவ கே.டி. அறுண தீபால் உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.03.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/23)**

அ. பண்டாரகம கல்வி வலயப் பாடசாலைகளுக்குத் தேவையான மொத்த காவலாளிகள் (இரவு பகல்) எண்ணிக் கை எத்தனை ? தற் போது காணப்படும் எண்ணிக்கை எத்தனை ?

ஆ. இரவு நேரத்தில் மட்டும் காவலாளி சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களின் பெயர்களை ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் இணங்க சமர்ப்பிக்க இயலுமா ? அப்படியாயின் அவர்கள் யார் ?

இ. பகல் நேரத்தில் மட்டும் காவலாளி சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களின் பெயர்களை ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் இணங்க சமர்ப்பிக்க இயலுமா ? அப்படியாயின் அவர்கள் யார் ?

ஈ. வேலை மாற்று காவலாளி முறைக்கு இரவு / பகல் இரண்டுக்குமாக சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்களின் பெயர்களை ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் இணங்க சமர்ப்பிக்க இயலுமா ? அப்படியாயின் அவர்கள் யார் ?

உ. மேலே குறிப்பிடப்பட்ட இரவு வேளை காவலாளிகளின் கடமை ஒழுங்கான முறையில் இடம் பெறுகின்றதா ? என்பது தொடர்பாக பரிசோதித்துப் பார்க்கும் ஏதாவதொரு முறை ஒன்று காணப்படுகின்றதா ? அப்படியாயின் அது என்ன ?

ஊ. காவலாளி பதவிக்காக ஆட்சேர்த்துக் கொள்ளப்படாத பிற பதவிகளுக்காக ஆட்சேர்க்கப் பட்டுள்ளவர்களில் இருந்து காவலாளிப் பதவிக்கு அமர்த்தப்படுகின்றனரா ? அப்படியாயின் அவர்கள் யார் ?

**06.** **கௌரவ கே.டி. அறுண தீபால் உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.03.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/24)**

அ. மேல் மாகாணத்தினுள் ஆசிரியர்களி ன் ஒழுக்க மீறல் நடவடிக்கை தொடர்பாக எந்த சட்டம், நியதிச் சட்டம் பிரமாணம் அல்லது ஒழுக்க கோவை அல்லது பிற பொது சட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது ? அப்படியாயின் அது யாது ?

ஆ. ஏதாவதொரு ஆசிரியர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டுமாயின் சட்டமொன்று அல்லது பிரமாணம் ஒன்று அல்லது ஒழுக்கக் கோவை ஒன்று மீறப்பட்டிருக்க வேண்டும் என்பதனை நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

இ. ஏதாவதொரு ஆசிரியர் ஒருவர் ஏதாவதொரு பிள்ளையின் பெற்றோர்களின் விருப்பத்தின் கீழ் பாடசாலைக்கு வருவதற்காக போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது ஒழுக்க மீறல் நடவடிக்கை ஆகுமா ? அப்படியாயின் அது மேற்கூறப்பட்ட எந்த சட்டத்தின் கீழ் ?

ஈ. ஆசிரியர் ஒருவருடன் பிள்ளை ஒருவர் பாடசாலைக்கு வருவதன் மூலம் அப் பிள்ளையின் எதிர்கால நடத்தைக்கு பிரச்சினை ஏற்பட இயலுமா ? அப்படியாயின் அது எம்முறையில் ?

உ. துவிச் சக்கர வண்டி ஒன்றில் பயணிக்கக் கூடிய உச்ச எண்ணிக்கையை நீங்கள் அறிவீர்களா ? அந்த எண்ணிக்கையில் இரண்டு பேரை விட மேலதிகமாக கொண்டு செல்வதற்கு அங்கீகாரம் வழங்க அல்லது ஒத்துழைப்பை வழங்க மாகாண கல்வி சேவையின் ஏதாவது உத்தியோகத்தர் ஒருவருக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா ? அப்படியாயின் அது யாருக்கு ?

ஊ. ஏதாவது உத்தியோகத்தர் ஒருவர் ஆசிரியர் ஒருவரின் ஒழுக்கம் தொடர்பாக தான்தோன்றித் தனமாக சட்டத்திற்கு முரணாக நடவடிக்கை எடுத்திருந்தால் அந்த உத்தியோகத்தர் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**07.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.03.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/25)**

அ. i. மேல் மாகாணத்தின் இரண்டாம் தரப் பாடசாலைகளில் 1000 செயற்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த பாடசாலைகளின் எண்ணிக் கை எவ்வளவு ?

ii. அது எப் பாடசாலைகள் ?

ஆ. i. அப் பாடசாலைகளுக்காக இரண்டாம் தரப் பாடசாலைகள் 1000 செயற்திட்டத்தினால் கிடைக்கப் பெற்ற அபிவிருத்தி செயற்றிட்டங்கள் என்ன ?

ii. அந்த ஒவ்வொரு செயற்திட்டமும் மாணவர்களின் உரிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனவா ?

iii. இல்லையாயின் ஏன்?

இ. i. இந்த இரண்டாம் தர பாடசாலை செயற்திட்டத்தினை நடைமுறைப் படுத்திய போது சிறப்படையாத பாடசாலைகள் காணப்படுகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ii. அது எப் பாடசாலைகள் ?

iii. அது தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக் கை யாது ?

**08.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.03.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/26)**

அ. i. மேல் மாகாணத்தினுள் களனி மற்றும் நீர் கொழும்பு வலயக் கல்வி காரியாலயங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களின் பெயர்கள் எவை?

ii. அவர்களின் கல்வித் தகைமைகள் என்ன ?

ஆ. இந்த வலயத்தில் தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கும் மேலேயுள்ள பணிப்பாளர்களை விட உயர்ந்த தர கல்வித் தகைமைகள் உள்ளவர்கள் எத்தனை பேர் காணப்படுகின்றனர் ?

இ. அவர்களின் பெயர் என்ன ?

ஈ. பதவிகளுக்கு உரிய கல்வித் தகைமை குறைந்தவர்களினால் மேற்குறித்த பதவிகளில் பதில் கடமை ஆற்றப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. உரிய கல்வித் தகைமை காணப்படும் நபர்களை அப் பதவிகளில் நியமித்துச் சென்ற காலத்தினுள் ஏற்பட்ட தவறுகளை திருத்துவதற்கு நீங்கள் நவடிக்கை எடுப்பீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**09.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.03.21 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/27)**

அ. நீர்கொழும்பு கல்வி வலயத்தினுள் அமைந்துள்ள சீதுவ தவிசமர வித்தியாலயத்தின் பிரச்சினை தொடர்பாக நீங்கள் அறிவீர்களா ?

ஆ. நகர சபை நிதியத்தில் இருந்து ரூபா பதினைந்து இலட்சத்தை ஒதுக்கி “ஜெயராஜ் பெர்ணாந்து பிள்ளை நிதியத்தினால்” புத்தகங்களை பகிர்ந்து அளிப்பதாக பிரசாரம் செய்து நடாத்தப்பட்ட வைபவத்தில் ஏற்பட்ட ஆசிரிய, பெற்றோர், உத்தியோகத்தர்கள் தாக்குதலை நீங்கள் அறிவீர்களா ?

இ. இப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு பாடசாலையை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அதிபரை அரசியல் தேவைக்காக மாற்ற ஏன் நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

ஈ. பாடசாலைகளில் அரசியல் நிர்ப்பந்தங்களை ஏற்படுவதை நிறுத்த நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

உ. கிராமப் பகுதி பாடசாலைகளை மேம்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அதிபர்களுக்கு நிர்ப்பந்தம் இன்றி கடமையாற்றுவதற்குத் தேவையான நிலைமை ஒன்றினை நீங்கள் ஏற்படுத்துவீர்களா ?

உ. இல்லையாயின் ஏன் ?

**10.** **கௌரவ பீ.டி. அபேரத்ன உறுப்பினரினால் கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/vi (1)16/28)**

அ. ஹொரணை திக்கேனபுர வீதி, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் காப்பட் இடப்பட்டுள்ளதா ?

ஆ. இதற்காக செலவு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவு ?

இ. பூர்த்தி செய்யப்பட்டுள்ள அளவின் நீளம் மற்றும் அகலம் எவ்வளவு ?

ஈ. இவ் வீதியில் கல் பதிப்பதற்கு செலவு செய்யப்பட்ட நிதி எவ்வளவு ?

உ. இச் செயற்றிட்டத்தினை மேற்கொண்ட ஒப்பந்தக்காரர் அல்லது ஒப்பந்த நிறுவனம் எது?

ஊ. உரிய நிதியிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நிர்மாணம் தொடர்பாக நீங்கள் திருப்திப்படுகின்றீர்களா ?

எ. திருப்திப்படவில்லையாயின் இது தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**11. கௌரவ பீ.டி. அபேரத்ன உறுப்பினரினால் கடற்றொழில், வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/vi (1)16/29)**

அ. 2012 ஆம் ஆண்டில் ரூபா 164,232,954/- ஐ செலவு செய்து மேல் மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தனிப்பட்ட தாபனம் ஒன்றின் ஊடாக கவர் இடும் இயந்திரங்கள் 02 மற்றும் கலவை கலக்கும் இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா ?

ஆ. கொள்வனவு செய்யப்பட்டிருந்தால் அந் நிதி செலவு செய்யப்பட்டுள்ள முறை யாது ?

இ. 2012 நவம்பர் 23 ஆந் திகதி உரிய இயந்திரம் அதிகார சபைக்கு கையேற்கப்பட்டு உள்ளதா ?

ஈ. அவ் இயந்திரம் இது வரை உபயோகத்திற்கு எடுக்கப்படவில்லையா ?

உ. அவ் இயந்திரத்திற்கு உரிய வருடாந்த காப்புறுதித் தவணைக் கட்டண நிதி எவ்வளவு ?

ஊ. உபயோகத்திற்கு எடுக்கப்படாத இயந்திரம் காப்புறுதி செய்யப்பட்டதினால் அதிகார சபைக்கு நட்டம் ஏற்படுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

எ. இதுவரை இவ் இயந்திரத்தை காப்புறுதி செய்ததால் அதிகார சபைக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு ?

ஏ. மேற்குறிப்பிட்ட படி உரிய நிதி அழிவுக்கு உட்படுமாறு செய்த முதலீடு தொடர்பாக நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?

**12. கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/vi (1)16/30)**

அ. 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை எத்தனை ?

ஆ. இவற்றில் கலந்துரையாடலுக்கு (விவாதத்திற்கு) உட்படுத்தப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

இ. அகற்றிக் கொள்ளப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

ஈ. ஏகமனதாக நிறைவேற்றப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

உ. மேலதிக வாக்குகலால் நிறைவேற்றப்பட்டவற்றின் எண்ணிக்கை எத்தனை ?

ஊ. தோல்வியடைந்த பிரேரணைகளின் எண்ணிக்கை எத்தனை ?

எ. அப் பிரேரணைகளுள் கல்வி, சுகாதாரம், கூட்டுறவு சட்டம் மற்றும் நியதிச் சட்டம் போக்குவரத்து ஆக ஒவ்வொரு விடயத்திற்கும் உரியதான பிரேரணைகள் எத்தனை ?

ஏ. அந்த நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளுள் இவ் வேலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரேரணைகள் யாவை ? எந்த வருடம் தொடக்கம் ? எவ் அமைச்சின் கீழ் ?

ஐ. வருடாந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது இந்த நிறைவேற்றப்பட்ட பிரேரணைகள் தொடர்பாக கவனத்தைச் செலுத்தி ஆராய்ந்து பார்க்கப்பட்டதா ? எந்த வருடத்தில் ?

ஒ. நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளை எவரது இயலாமையினால் நடைமுறைப் படுத்தப்பட வில்லை ? இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் யார் ?

ஓ. இது வரை நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளை மீண்டும் ஆராய்ந்து பார்த்து எதிர்கால நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இச் சபையின் மூலம் குழு ஒன்றினை நியமிப்பது சிறந்தது என்பதை நினைக்கின்றீர்களா ? அப்படியாயின் அதற்காக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**13. கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் விவசாய, காணி, நீர்ப்பாசனம் விலங்குற்பத்தி சுகாதாரம் அத்துடன் கமநல அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/vi (1)16/31)**

அ. மேல் மாகாண சபையின் கீழ் மாகாணத்தில் உள்ள காணிகள் நீண்ட காலம் அல்லது குறுங் காலத்தின் கீழ் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன ?

ஆ. i. காணியின் பெயர் மற்றும் அளவு ?
ii. காணி அமைந்துள்ள இடம் ?

iii. குத்தகையின் அடிப்படை ?
iv. குத்தகைக் காரரின் பெயர் ?
v. தாபனம் ஒன்று பேணப்பட்டால் தாபனத்தின் பெயர் ?
vi. குத்தகைக்கு வழங்கிய திகதி ?
vii. குத்தகைக் காலம் நிறைவடையும் திகதி ?
viii. 2016.03.15 ஆந் திகதியில் நிலுவைக் குத்தகையின் அளவினை அறிக்கை ஒன்றாகப் பெற்றுக் கொடுப்பீர்களா ?

இ. மேலே (ஆ) தகவல்களுக்கு இணங்க குத்தகைக்கு வழங்கிய பின்னர் உரிய முறையில் குத்தகையினை செலுத்தாததினால் சிக்கல் ஏற்பட்டுள்ள குத்தகைக் காரர்களின் மற்றும் அத் தாபனத்தின் பெயர்களைக் குறிப்பிட முடியுமா ?

ஈ. மாகாண சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவைக் குத்தகையின் அளவின் மொத்தம் எவ்வளவு ?

உ. குத்தகை செலுத்தப்படாததன் காரணமாக ஏற்பட்டுள்ள இப் பிரச்சினை தொடர்பாக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

ஊ. இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபைக் கூட்டம் (I)

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

"2016.03.23 ஆந் திகதி சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் வரப்பட்ட இணக்கத்தின் படி இன்றைய தினம் (2016.04.05) ஆந் திகதி கலைந்து சென்ற பின்பு இச் சபை 2016.05.03 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு கூட வேண்டும்."

## சபைக் கூட்டம் (II)

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

"இதற்கு முன்னர் எந்த முடிவொன்று எடுத்திருந்த போதிலும் அதனைக் கருத்தில் கொள்ளாது 2016.03.23 ஆந் திகதி நடைபெற்ற சபை நடவடிக்கை தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் வரப்பட்ட இணக்கத்தின் படி 2016.04.19 ஆந் திகதி சபைக் கூட்டம் நடைபெறாத தினம் ஒன்றாகக் கருதி செயற்படுத்தப்படல் வேண்டும்."

## X. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா) இனால் சமர்ப்பிக்கப்படும் நியதிச் சட்டம்**

பிரேரணை :

"மேல் மாகாணத்தின் 2016 இன் ..... ஆம் இலக்க மேல் மாகாணத்தின் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை போன்றவற்றின் நகர பிதா, தலைவர் அங்கத்தவர்களுக்காக ஆயுட்கால காப்புறுதி முறைக்கு பங்களிப்பு நிதியினை செலுத்துவது தொடர்பான நியதிச் சட்டம்"

(முதலாம் முறை வாசித்தல்)

*“மேல் மாகாணத்தின் 2016 இன் ..... ஆம் இலக்க மேல் மாகாணத்தின் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை போன்றவற்றின் நகர பிதா, தலைவர் அங்கத்தவர்களுக்காக ஆயுட்கால காப்புறுதி முறைக்காக பங்களிப்பு நிதியாக மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை நிதியத்தில் செலவிடுவதற்காக ஏற்பாடுகளை வழங்குவதற்குரிய நியதிச் சட்டம் ஒன்றாகும்”*

## XI. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ லலித் எல்லாவல அவர்கள்

மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களினது புதிய அரசின் மூலமும், சென்ற அரசினால் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படும் ஊழல் மோசடி ஆட்கொலை, அரச சொத்துக்களின் முறைகேடான பாவனை தொடர்பாக இவ் வேளையில் குழு ஒன்றினை நியமித்து தவறிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டுவந்து தண்டனை வழங்குவதற்கு திட்டமிடுவது மகிழ்ச்சிக்கு உரிய விடயம் ஒன்றாகும்.

1989 மற்றும் 1990 கால எல்லையினுள் இந் நாட்டில் மிகப் பாரிய அளவாக அரச சொத்துக்களை அழித்து ஒழித்த, மனித உயிர்களை அழித்த காலம் அண்மைக்கால இலங்கை வரலாற்றில் இடம்பெறவில்லை எனவே இது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு குழு ஒன்றினை நியமித்து அவ் அரசாங்கச் சொத்துக்களை அழித்து மனித உயிர்களைக் கொன்ற நபர்களுக்கு சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கவும் மற்றும் அழித்து ஒழிக்கப்பட்ட அரசாங்க சொத்துக்களின் பெறுமதியை உரிய தவறிழைத்தவர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் மேன்மை தங்கிய ஜனாதிபதியிடம் இம்மேல் மாகாண மாகாண சபை கேட்டுக் கொள்கின்றது. **(பி/vi (1)15/02)**

### 02. கௌரவ எஸ்.ஏ.டி. ஜகத் குமார அவர்கள்

போதைவஸ்துடன் தொடர்பற்ற தேகாரோக்கியம் மிக்க சமூகம் ஒன்றினை ஏற்படுத்துவதில் முழு இலங்கையிலும் ஏற்பட்டுள்ள பிரதான தடை சமூகத்தில் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் அரசியல்வாதிகள். அந்த மதுபான மற்றும் போதைப் பொருள் வியாபாரங்களுடன் தொடர்புடையவர்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதாகும். எனவே தேகாரோக்கியம் மிக்க சமூகம் ஒன்றினையும், சிறந்த எதிர்காலம் ஒன்றினையும், போதைப் பொருளுக்கு அடிமையற்ற சமூகம் மற்றும் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக மதுபானம் மற்றும் போதைப் பொருட்களுக்கு சமூகத்தில் ஏற்பட்டுள்ள கேள்வியைக் குறைப்பதற்கும், அதேபோல் அவற்றில் ஈடுபாடு உள்ளவர்களை தடுக்க பொறுப்புச் சொல்ல வேண்டிய மாகாண சபை ஒன்றாக இந்த மேல் மாகாண மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விஷேடமாக அதற்காக மக்கள் பிரதி நிதிகள் மற்றும் சமூகத்தின் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் மதுபானம் மற்றும் போதைப்பொருள் வியாபரங்களுடன் தொடர்புபடாது செயற்பட வேண்டியதுடன், அவ்வாறு தொடர்புபடுபவர்கள் காணப்பட்டால் அவர்களுக்கு பட்டம் பதவி பாராமல் தண்டனை வழங்க வேண்டும். மதுபானப் போதைப் பொருளினை இந் நாட்டில் இருந்து அகற்றுவதற்காக எல்லா மதுபானம் மற்றும் போதைப் பொருட்களை நாட்டினுள் கொண்டு வருவது மற்றும் உபயோகிப்பதை நிறுத்துவதற்காக கடினமான சட்ட திட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றபடியால் இதற்குத் தேவையான அம்சங்களைத் தயாரிக்குமாறு கௌரவ ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசிடம் வேண்டுகோள் விடுப்பதுடன், இதன் மூலம் சமூகத்தில் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள், அரசியல்வாதிகள் மதுபானம் போதைப் பொருள் வியாபாரங்களில் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு பாரிய தண்டனை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு இம் மேல் மாகாண மாகாண சபை கேட்டுக் கொள்கின்றது. **(பி/vi (1)15/03)**

## XII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2016.03.23 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.